





## தமிழ்நாடு எப்போதுமே அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் திறந்த மனதுடன் வரவேற்கும்:

# முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த அடித்தளத்தின் மீதுதான், இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்புகிறோம்!

## சென்னையில் நடைபெற்ற உமாஜின் தமிழ்நாடு – 2026 மாநாடு நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஜன.12 –**

**சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், உமாஜின் தமிழ்நாடு – 2026 மாநாட்டின் நிறைவு விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ‘‘முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்த இந்த அடித்தளத்தின் மீதுதான், நாம் இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்’’ என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

உமாஜின்( UMAGINE) தமிழ்நாடு - 2026 நிறைவு விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உமாஜின் - 2026 இப்போது நிறைவடையும் தருணத்தில், இந்த உச்சி மாநாடு தனது நோக்கங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது ஒரு அர்த்தமுள்ள மேடையை உருவாக்கியுள்ளது.

நம் எதிர்காலம் குறித்த கனவு உரையாடலாகவும், உரையாடல் ஒத்துழைப்பாகவும், இந்த ஒத்துழைப்பு மதிப்புமிக்க விளைவுகளாகவும் மாறியுள்ளது. கடந்த இரண்டு நாட்களில், உமாஜின் மூலம் தமிழ்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது தனித்தனி துறைகளைச் சார்ந்து மட்டுமல்ல அல்ல, மாநிலத்தின் உண்மையான வலிமைகளை அடிப்படையாகக் கொண்டு, நன்கு ஒருங்கிணைந்த கருத்துக்களைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபித்துள்ளது.




### முத்தமிழறிஞர் கலைஞர்

தமிழ்நாடு எப்போதுமே அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் திறந்த மனதுடன் வரவேற்கும் மாநிலம். புதிய முயற்சிகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் மாநிலம். தமிழ்நாடு எப்போதும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஏற்றுக் கொள்வதில் முன்னணியில் நிற்கிறது. திராவிட இயக்கம் எப்போதும் அறிவியலுக்கு உறுதுணையாக நின்று வருகிறது. அதனால்தான் தமிழ்நாட்டு மக்கள் பல விஷயங்களில் எப்போதும் முற்போக்கு சிந்தனையோடு இருக்கிறார்கள்.

நமது தலைவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பார்வை, நாட்டின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், தனித்துவமானது. தொழில்நுட்பத்தை, முற்போக்கான சமூகத்தை உருவாக்கும் கருவியாக அவர்கள் கண்டார்கள். நாட்டிலேயே முதல்முறையாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997 - இல் தமிழ்நாட்டுக்கான மாநில தகவல் தொழிற்நுட்ப கொள்கையை அறிமுகப்படுத்தினார்கள். 1998-இல் பள்ளிகளில் கணினிக் கல்வியைத் தொடங்கினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்த இந்த அடித்தளத்தின் மீதுதான், நாம் இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு ஐ.டி. துறையில் முன்னணியில் நிற்கிறது. அதேநேரம் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்கள் பின்தங்கிய பிரிவினரையும் சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. முன்பு ரேடியோ, தொலைக்காட்சி போன்ற புதுமைகள் வந்தபோது, அவை மேல்தட்டு மக்களின் வீடுகளில் மட்டுமே இருந்தன. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் ரேடியோ கேட்கவோ, தொலைக்காட்சி பார்க்கவோ பணக்கார வீடுகளில் கூடி இருந்தனர்.

### வண்ணத் தொலைக்காட்சிகள்

25 ஆண்டுகளுக்கு முன் பல கிராமங்களில் இருந்த நிலை இதுதான். ஒவ்வொரு வீட்டுக்கும் வண்ணத் தொலைக் காட்சிகளை வழங்கியதன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞர் இந்த நிலையை மாற்றினார். அதேபோல, தொழில்நுட்ப புதுமைகளின் பயன்கள் பணக்காரர்கள் மற்றும் நகர்ப்புறங்களில் மட்டும் முடங்கிவிடக் கூடாது. பொதுமக்கள் மற்றும் கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்தப் பார்வையோடு, நமது மாண்புமிகு முதலமைச்சர் கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு ஏற்கனவே மனிதவளத்தில் பெரும் பலம் கொண்டது. இன்று பெரும்பாலான இளைஞர்கள் மடி கணினி உடையவர்களாக இருக்கிறார்கள். இது உமாஜின் தமிழ்நாட்டின் பங்கேற்பாளர்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கியுள்ளது. விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் எஸ்.டி.ஏ.டி. (SDAT) டிஜிட்டல் விளையாட்டு மேம்பாட்டில் மிகப் பெரிய உயரங்களை எட்டியுள்ளது என்பதில் பெருமிதம் கொள்கிறேன். நாட்டிலேயே முதல் முறையாக அத்லெட்டிக் மானேஜ்மென்ட் சிஸ்டம் (Athlete Management System - AMS) தொடங்கப்பட்டுள்ளது. இது வீரர்களால் மையப்படுத்தப்பட்ட, தரவு சார்ந்த பயிற்சியை வழங்குகிறது. ஏ.எம்.எஸ். (AMS) மூலம் வீரர்களின் பயிற்சி, உடல்நலம், செயல்திறன், எதிர்பாரா காயங்கள் தடுப்பு ஆகியவற்றை கண்காணிக்கிறோம்.

### 5,500-க்கும் மேற்பட்ட வீரர்கள்

இதன் மூலம் தற்போது 41 விளையாட்டு விடுதிகளில் செயல்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் 5,500-க்கும் மேற்பட்ட வீரர்கள் பயனடைகின்றனர். தமிழ்நாடு இ-ஸ்போர்ட்ஸ் துறையிலும் முன்னணியில் உள்ளது. கடந்தாண்டு முதலமைச்சர் கோப்பையில் இ-ஸ்போர்ட்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு இன்னும் விரிவாக்கப்பட்ட தனிப் பிரிவு போட்டியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

முதல் ஆண்டே மாநிலம் முழுவதிலும் 6,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்பில் பெரும் வெற்றியைப் பெற்றது.

தமிழ்நாட்டின் தரவு மையக் கொள்கை, தடையற்ற மின்சார விநியோகம், வலுவான இ-பைபர் இணைப்பு ஆகியவை டிஜிட்டல் உள்கட்டமைப்புக்கு உகந்த இடமாக நம் மாநிலத்தை உயர்த்தியுள்ளன. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு மற்றும் அடுத்த தலைமுறை மின்னணு ஆளுகை குறித்த உமாஜின் அமர்வுகள், பெரிய அளவிலான டிஜிட்டல் அமைப்புகளை வடிவமைத்து வழங்குவதில், தமிழ்நாட்டின் நிரூபிக்கப்பட்ட திறனை வெளிப்படுத்தின.

### தொழில்நுட்ப உச்சி மாநாடுகள்

தொழில்நுட்பம் , சேவை வழங்கல் மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துவதில் எத்தகைய பங்காற்றும் என்பதற்கு இந்த தளங்கள் தேசிய அளவில் முன்மாதிரியாகத் திகழ்கின்றன. மாநிலம் முழுவதிலும் உள்ள சிறு நகரங்கள் மற்றும் ஊர்களில் இருந்து ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் பங்கேற்றது, தமிழ்நாட்டின் புதுமைச் சூழல் உள்ளடக்கமானதாகவும் உலகளவில் இணைக்கப்பட்டதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த உமாஜின் மாநாட்டில் கையெழுத்தான எம்.ஓ.யு. (MOU) - க்கள், அறிவிக்கப்பட்ட கூட்டாண்மைகள், தொடங்கப்பட்ட உரையாடல்கள்

இந்த நிகழ்வு மேலும் வளர்ச்சிக்கான ஊக்கியாக செயல்படுவதை வலியுறுத்துகின்றது. 2021-இல் முதலில் அறிவிக்கப்பட்ட உமாஜின், தொழில்நுட்பம், கொள்கை, புதுமை, பொது நோக்கம் ஆகியவை ஒன்றிணையும் தளமாக கருதப்பட்டது. அதன்பின் இது இந்தியாவின் மிகவும் நம்பகமான தொழில்நுட்ப உச்சி மாநாடுகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. திறன் கட்டமைப்பில் இருந்து உலகளாவிய தலைமைத்துவத்துக்கான தமிழ்நாட்டின் பயணத்தைப் பிரதிபலிக்கிறது. இந்நிகழ்வின் வெற்றி, நாம் கட்டியெழுப்பிய தொழில்நுட்ப சூழலின் உறுதியையும், முன்னோக்கி செல்லும் உந்துதலையும் உணர்த்துகிறது.

### நம்பகமான தாக்கம்

இந்த உமாஜின் மாநாடு, தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் பயணத்தில் கணிசமான பங்களிப்பைச் செய்யும் என்று நம்புகிறேன். உமாஜினின் நம்பகம்மிக்க தாக்கம், தமிழ்நாட்டை உலகளாவிய தளமாக வடிவமைப்பதில், மாண்புமிகு அமைச்சர் முனைவர் அண்ணன் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

இந்த உமாஜின் தமிழ்நாடு 2026-ஐ அர்த்தமுள்ளத்தாக்கி அதனை வெற்றியடைய செய்த அனைத்து பங்கேற்பாளர்கள், கூட்டாளர்கள், பங்களிப்பாளர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2026) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை துறைமுகத்தில் 6.1.2026 முதல் 9.1.2026 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய கடலோர காவல்படை டைரக்டர் ஜெனரல் பரமேஷ் சிவமணி, தமிழ்நாடு பாய்மர படகு சங்கத்தின் துணைத் தலைவர் அசோக் தாக்கர் உள்பட பாய்மரப் படகு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (10.01.2026) நடைபெற்ற விழாவில் திருச்சிராப்பள்ளி ராஜா காலனியில் முதன்மை பள்ளிக்கல்வி அலுவலகத்தினை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மண்டல தலைவர் மதிவாணன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி கோ. கிருஷ்ண பிரியா, மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக ”உலகம் உங்கள் கையில் என்னும் மடிக்கணினிகள் வழங்கும் மாபெரும் விழாவினை தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்டம் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திபா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மேயர் சண்.இராமநாதன், சு.ப.தமிழழகன், மரு.அஞ்சுகம்பூபதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ் மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.




வெல்லும் தமிழ் பெண்கள் தி.மு.க. மகளிர் மாநாடு குறித்து தஞ்சை வடக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.